<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு.**</u>

<u>**O.S.No.34/2008**</u>

| | |
|---|---|
| 5–ம் பிரதிவாதி தரப்பு சாட்சி | **பி.சா. 5** |
| பெயர் | திருமதி. சாந்தி (எ) மீனாட்சி |
| கணவரின் பெயர் | திரு. வெங்கடேசன் |
| கிராமம் | செய்யாறு |
| வட்டம் | செய்யாறு |
| தொழில் | இல்லத்தரசி |
| வயது | 59 |

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16–ஆம் நாளன்று, திரு.M.விக்னேஷ் பிரபு, M.L., கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் 1969–ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

<u>**முதல் விசாரணை**</u> **:**

1. நான் இந்த வழக்கில் 5–ம் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை முதன்மை சாட்சியமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதனை நான் சொல்லிதான் எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதனை படித்து பார்த்து, வழக்கறிஞர் படித்து சொல்ல சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம்

செய்தேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்கிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| 1. | - | அ.வ. எண்.77/1999 வழக்குரையின் சான்றிட்ட நகல் - பி.சா.ஆ.9. |
| 2. | - | அ.வ. எண். 77/1999 வழக்கில் 1-ம் பிரதிவாதி தாக்கல் செய்த கூடுதல் எதிர்வழக்குரை - சான்றிட்ட நகல் - பி.சா.ஆ.10. |
| 3. | - | அ.வ. எண். 77/1999 வழக்கின் தீர்ப்புரை - சான்றிட்ட நகல் - பி.சா.ஆ.11. |
| 4. | - | அ.வ. எண். 77/1999 வழக்கின் தீர்ப்பாணை - சான்றிட்ட நகல் - பி.சா.ஆ.12. |
| 5. | - | அ.வ. எண். 77/1999 வழக்கில் 1-ம் பிரதிவாதி கண்ணன் என்பவரின் வாக்குமூலம் - சான்றிட்ட நகல் - பி.சா.ஆ.13. |
| 6. | 16-12-1971 | கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் - பி.சா.ஆ.14. |
| 7. | 07-08-1977 | கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் - பி.சா.ஆ.15. |
| 8. | - | 5-ம் பிரதிவாதிக்கு செய்யாறு பட்சீஸ்வரர் கோவிலில் திருமணம் நடந்ததற்கான திருமண ரசீது - சான்றிட்ட நகல் - பி.சா.ஆ.16. |
| 9. | 20-12-1995 | தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு - சான்றிட்ட நகல் - பி.சா.ஆ.17. |
| 10. | - | மேற்படி அறிவிப்பினை 1-ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையின் சான்றிட்ட நகல் - பி.சா.ஆ.18. |

எனவே, வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டி பிராத்திக்கிறேன்.

**<u>குறுக்கு விசாரணை</u> :**

(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.09.16 12:45:37 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**